# Sangam Literature and its Virtues for Research Purposes

**Dr. I.J. Helena Gracelyn**
*Assistant Professor, Department of Tamil*
*St. John's College, Palayamkottai*

**Abstract**
*The oldest Tamil literature is Sangam literature. During the Sangam period, kings were known for their generosity and virtue. Information about such generosity and virtue can be found in inscriptions and copper plates. Both the people and the kings of the Sangam period wanted to provide material to poets to establish their fame and alleviate poverty. The study of the context in which these generosity and virtue took place is the summary of this article.*
***Keywords:*** *Gift, Environment, Virtue*

**References**
1. Influence of Sangam Literature, Kannadasan Publishing House, Thyagaraya Nagar, Chennai.
2. Prof. Vaiyapuri Pillai, Sangam Literature (Pattu and Thokai).
3. Puliyur Kesigan, Purananuru: Text and Commentary, Sarada Publishing House, Chennai.
4. Subramaniam, Purananuru, Manivacagar Publishing House, Chennai, 2010.

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255898

# ஆய்வு நோக்கில் சங்க இலக்கிய கொடையும் அறமும்

***முனைவர் ஐ.ஜெ. ஹெலினா கிரேஸ்லின்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கியத்தில் மிகவும் பழமையானது சங்க இலக்கியம். சங்க காலத்தில் மன்னர்கள் கொடையும் அறமும் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். இத்தகைய கொடையும் அறமும் குறித்த தகவல்களை கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலமாக அறியலாம். சங்க கால மக்கள், மன்னர்கள் ஆகிய இரண்டு பேரும் கவிஞர்களுக்கு பொருள் கொடுத்து புகழை நிலைநிறுத்தவும், வறுமையை போக்கவும் விரும்பியவர்கள். இவர்களின் இந்தக் கொடையும், அறமும் எந்த சூழலில் நடைபெற்றது என்பதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.*
***திறவுச்சொற்கள்:*** *கொடை, சூழல், அறம்.*

**முன்னுரை**

சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் பொது ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பலதரப்பட்ட தொழில் புரிந்தோரும், பெண்களும் அடங்குவர். அக்கால கட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளை படம் பிடித்துக் காட்டுகின்றன. பண்டைத் தமிழரது காதல், போர், வீரம், கொடை, ஆட்சியமைப்பு, வாணிகம் போன்ற நடப்புகளை சங்க இலக்கியப் பாடல்கள் நமக்கு அறியத் தருகின்றன. பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று வழங்கப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற தொகுப்புகளே சங்க இலக்கிய நூல்கள் ஆகும். இந்த நூல்கள் மதுரையில் அமைந்த கடைச் சங்க காலத்தில் தொகுக்கப்பட்டவைகளாகும்.

**சங்க இலக்கியத்தில் கொடையும் சூழலும்**

சங்க காலத்தில் மக்கள், அரசர்கள் ஆகிய இரு திறத்தாலும் கவிஞர்களுக்கு பொருள் கொடுத்து புகழை நிலைநிறுத்தவும், வறுமையை போக்கவும் விரும்பினார்கள். அவ்வழியில் தம்மைப் பாடி வரும் புலவருக்கு பொன்னையும், பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தமை சங்க இலக்கியம் வழி அறியலாம். பாரி, ஓரி, காரி, பேகன் போன்ற கடையெழு வள்ளல்கள் எனப் போற்றப்பட்டனர். பாரி முல்லைக்கு தேரையும் பேகன் மயிலுக்குப் போர்வையையும் அளித்துஅழியாப்புகழ்பெற்றனர். இவற்றை நாம் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மூலமும், மன்னர்களின் கொடைத்தின்மையை மகாபாரத காப்பியத்தில் இடம் பெறும் மைய கதாபாத்திரங்களுள் ஒருவரான கர்ணனும் கொடை வள்ளலனாக இருந்ததை நம்மால் அறியமுடிந்தது.

பிறருக்கு ஒன்று கொடுப்பதே கொடையாகும். அத்தகைய கொடை பற்றிய விளக்கம் பின்வருமாறு அறியலாம். சங்க மன்னர்கள் பகைவரிடமிருந்து கவர்ந்து வரும் ஆநிரைகளை பகிர்ந்துக் கொள்வர். அவ்வாறு பகர்ந்து பெற்ற பசுக்களை தன்னை நாடி வந்த இரவலர்க்கு கொடுப்பது கொடையாகும் என்கிறார். தொல்காப்பியர், இதனை

வள்ளுவர் வறியார்க் கொன்றீவதே ஈகை (குறள்.221) என்ற குறளில் ஏழைகளுக்கு ஒன்றை ஈவதே கொடை. மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் வியாபாரத் தன்மையாகும் என்கிறார்.

இந்த கொடை என்ற சொல்லுக்கு தானம் என்ற பொருளாகக் கொண்டு அந்த தானத்தை தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம் என மூன்று வகையாக கூறலாம்.

1. கலைப்படுதானம் - குற்றமற்ற நல்லதவத்தால் பெற்ற பொருளை உள்ளம் உவந்து கொடுப்பது.
2. தன்னிடம் இரந்து நின்றவர் மீது இரக்கப்பட்டு கொடுப்பது.(இடைப்படுதாமை)
3. அன்பு, சுயநலம் ஆகியவற்றின் காரணமாக கொடுப்பது - கலைப்படுதானம்.

சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடலில் 153 பாடல்கள் பாடாண் திணையில் உள்ளன. அவற்றில் 94 பாடல்களில் கொடை இடம் பெற்றுள்ளது. இந்த கொடையானது கொடுக்கப்படும் சூழலையும், கொடை பெறும் சூழலையும் இந்த பாடல்வழி நாம் அறியலாம்.

## கொடை குறித்து சங்க இலக்கியங்கள் கூறுவது

மன்னன் உயர்தலை, மலர் தலை உலகம் என்பது வழக்கு. அதாவது சங்க மன்னர்கள் புகழ், வீரம், கொடை ஆகியவை அவர்களிடம் இயல்பாக காணப்படுகின்றன. புலவர்கள் அரசர்களது நாடு, மலை, கொடை, வீரம் ஆகியவற்றை புகழ்ந்து பாடுவதால் அவருடைய புகழ் வெளிப்பட்டு நிற்கிறது. அதாவது சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்ற மன்னன் தன்னை புகழ்ந்து பாடிய பாடினிக்கு அணிகலனும், வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்பூவையும் கொடுத்துள்ளான் என்பதை பேய்மகள் இளவெய்னி என்ற புலவர்,

**புறம் பெற்ற வயவேந்தன்**
**மறம் பாடில் பாடினியும்மே**

**(புறநானூறு.11)**

என்ற பாடல் வழி அறியலாம்.

**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று**

**(புறம். 204)**

வாங்கிக் கொள் என்று நாமே மனம் உவந்து கொடுப்பது மிகச் சிறந்தது என்கிறது புறநானூறு. அதுபோல வள்ளுவரும் நாம் ஈட்ட கூடிய செல்வம் அனைத்தையும் மற்றவருக்கு கொடுப்பதே கொடை என்று குறள் 222 இல் பாடலில் கூறியுள்ளார்.

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

என்கிறார். பாரியின் கொடைத் தன்மையை மழைக்கு நிகராக கொடுக்க கூடியவன் என்ற சங்கப் பாடல் பின்வருமாறு கூறுகிறது.

**பாரி பாரி என்று பல ஏத்தி**
**ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனு மல்லன்**
**மாரியும் உண்டீண்டுலகு புறப்பதுவே**

என்கிறது.

குமணன் காட்டில் சென்று தங்கியிருந்த போது வறுமை கூறி வந்த பெருஞ்சித்தானாருக்கு கொடை அளித்ததை சங்க இலக்கியம் வழி அறியலாம்.

## சங்க இலக்கியத்தில் கொடையும் அறமும்

பழந்தமிழர் அகவாழ்வாயினும், புறவாழ்வாயினும் அறத்தை பெரிதாக மதித்து அறம் வழி நடக்கவே விரும்பினர். இலக்கியத்தில் அறம் என்ற சொல் ஒழுக்கம், அரசியல், நீதி, கொடை என்ற வகையில் அடக்குவர். தமிழர்கள் எளிய உயிர்களிடத்து இரக்கம் கொள்வதே உயர்ந்த மனிதப்பண்பு. அதனால் தான் ஒளவையார் தம் ஆத்திச்சூடியில் முதல் வரியாக அறம் செய்ய விரும்பு என்றார்.

முதலாவதாக இல்வாழ்க்கையில் அறத்தின் சிறப்பை குறித்து கூறுவதை,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது (குறள்.45)**

என்ற பாடல் வழி அறியலாம்.

ஒரு நல்ல அரசாட்சி செய்யக் கூடிய மன்னவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை,

**தன்னுயிர் போலத் தழீஇ உலகத்து**
**மன்னுயிர் காக்கும் மன்னன்**
**(பா.143)**

என்ற பாடலில் மன்னனுடைய கடமை தனது நாட்டில் வாழும் எல்லா உயிர்களை தன்னுயிர் போலவே எண்ணிப் பாது காப்பவனே மக்களால் மதிக்கப்படும் மன்னன் ஆவான். இவன் தான் அரசியல் தலைவன். பண்டைய தமிழ் மன்னர்கள் அநீதிக்கு அஞ்சினர். நீதிக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாகவாழ்ந்தனர். உலகத்துக்கு உயிர் அரசு தான் என்பது பழந்தமிழர் கருத்தாகும்.

அறம் என்ற சொல்லுக்கு ஈகை அல்லது ஈதல் என்ற பொருளும் உண்டு. இப்பொருள் பெரும்பாலும் காஞ்சித் திணை பாடலில் இடம்பெறுவதைக் காணலாம். வறுமையால் வாடி வரும் மக்களது வறுமையை அறிந்து ஈதல் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியதோடு தனக்கென வாழாது பிறருக்காக வாழ வேண்டும் என்று ஒரு பாடல் பாடியுள்ளார்.

கடலுள் மாய்ந்த இளம்வருவழுதி என்ற மன்னன் தனக்கென வாழாது பிறர்கென வாழும் பெரியோர்கள் உள்ளதால் இவ்வுலகம் உள்ளது. இவர்கள் அமிழ்தம் கிடைத்தாலும் அதை தான் மட்டும் தனியாக உண்ண மாட்டார்கள். என்பதை,

**உண்டாலம்ம இவ்வுலகமிந்திரர்**
**அமிழ்த மியைவதாயிது மினிதெனத்**
**தமக்கென முயலும் றுண்மையானே**
**(புறம். 182)**

பாடல்வழி அறியலாம்.

சங்க இலக்கியத்தில் பல வகையான அறங்கள் விளக்கப்பட்டாலும் கொடையே புலவர்கள் மிகுதியாக வலியுறுத்தினர். செல்வத்து பயன் ஈதல் என்பதை நன்கறிந்தனர். ஈதல் அறமாக கருதப்பட்டமையே மணிமேகலையில் இடம் பெறும் பாடல் வழி பின்வருமாறு அறியலாம்.

**அறம் எனப்படுவது யாது எனக் கேட்ட**
**மறவாது இதுகேள் மண் உயிர்க்கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையும் அல்லது**
**கண்டது இல்**

என சங்க இலக்கியத்தில் அறம் ஈதல் என்று பொருள் பெற்று விளங்குவதை நாம் காணலாம்.

## முடிவுரை

ஒருவன் பிறக்கும் போதே புகழுடன் பிறப்பது என்பது நடவாத காரியம். இந்த மனித பிறவியில் தனது செயல்களின் மூலம் தான் அவன் புகழ் அடைய வேண்டும். தனது அறச்செயல்கள் மூலமும் அரிய உழைப்பின் மூலமும் தான் அத்தகைய புகழை அடைய முடியும் என்பதை சங்க இலக்கியங்களின் வழி நம்மால் அறியமுடியும் என்பதை இக்கட்டுரையின் முடிவாகும்.

## பார்வை நூல்கள்

1. சங்க இலக்கியச் செல்வாக்கு, கண்ணதாசன் பதிப்பகம், தியாகராயநகர், சென்னை.
2. பேரா. வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்).
3. புலியூர்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
4. சுப்பிரமணியம், புறநானூறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.